**வெலிமட பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வெலிமட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வெலிமட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நிர்மாணிக்கப்பட்ட 02 நிர்மாணங்களுக்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 4,788,395 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 20,000,000 நிலையான வைப்பொன்று பணமாக்கி கெப்பட்டிபொல வாராந்த சந்தை நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் எஞ்சியிருந்த ரூபா 7,936,572 மூலதன வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,504,738 குறைவாக நிதி செயற்பாடுகள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 313,646,477 ஆன 03 சொத்து விடயங்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | பட்டோலைகளில் உள்ளடக்குவதற்கும் புதிய மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகள் பட்டோலைகள் போன்றவை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 19(1) ஆம் பிரிவு | 2007 சனவரி முதல் 2020 ஒக்டோபர் வரையான காலத்தில் அங்கீகாரமின்றி அமைய அடிப்படையில் 26 சுகாதார தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | நிதிப் பிரமாணம் 71 மாதிரி படிவத்தின் பிரகாரம் நியாயப்படுத்தும் அறிக்கை முகாமைத்துவ திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பதவியணியினரை அங்கீகரித்து ஆட்சேர்த்தல் வேண்டும். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக விதி) கோவை விதி 103, 104 | கடந்த ஆண்டில் பொருன் மெய்மையாய்வு அறிக்கை மூலம் இனங்காணப்பட்டிருந்த உபகரணங்களில் 35 அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு நட்டம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 02 பிரின்டர்கள் மற்றும் 27 சிறிய பிளாஸ்டிக் குடைகள் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத் தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | ஓய்வு பெற்றுச் செல்லல், சேவையை விட்டுச் செல்லல் மற்றும் மரணமடைந்த 10 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 217,178 தொகை 18 வருடங்களைவிட பழைய கடன் மீதியை பிணையாளர்களிடமிருந்தேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஊழியர் கடன் மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதியில் இலக்கம் 26/92 என்ற அரச நிர்வாக சுற்றிக்கை | 20 வாகனங்களின் அரச இலச்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் வாகனத்தில் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அச்சிடுவதற்கு கூறுவிலை கோரப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2016 டிசம்பர் 29 ஆம் திகதியில் இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குரிய 15 வாகனங்களில் எரிபொருள் எரிவு பரிசோதனை நீண்ட காலம் முதல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சபைக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஊ) | 2017 டிசம்பர் 21 ஆம் திகதியில் 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | நீண்ட கால ரீதியில் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகனங்கள் சபைக்கு கையளிப்பதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2006 5.4.4 ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு காப்புறுதி இன்றி ஆகக் கூடியது ரூபா 200,000 முற்பணம் வழங்க | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் |

| | | |
|---|---|---|
| முடியுமாக இருந்த போதிலும் 10 வேலைகளின் சங்கங்களுக்காக முற்பணமாக ரூபா 223,143 முதல் ரூபா 982,910 வரை பணம் செலுத்தப்பட்டிருந்தது. | | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 87,157,490 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 95,113,331 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | <u>2023</u> | | | | <u>2022</u> | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 6,170,900 | 6,265,862 | 4,387,557 | 1,878,305 | 5,657,070 | 6,037,055 | 1,579,631 | 44,574,244 |
| **(ii)** | வாடகை | 29,654,300 | 28,611,220 | 27,694,767 | 916,453 | 43,031,435 | 40,776,566 | 38,538,196 | 2,238,370 |
| **(iii)** | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,840,000 | 5,348,053 | 5,239,452 | 108,601 | 3,382,659 | 3,748,759 | 3,748,759 | - |
| **(iv)** | ஏனைய வருமானம் | 28,655,400 | 49,402,507 | 30,577,192 | 18,825,315 | 62,006,073 | 92,611,271 | 39,315,570 | 53,295,701 |
| | மொத்தம் | 67,320,600 | 89,627,642 | 67,898,968 | 21,728,674 | 114,077,237 | 143,173,651 | 83,182,156 | 100,108,315 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 4,363,215 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 1,051,442 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அந்த தொகையை பதிவளிப்பதற்கு கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 981,859 அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 7,044,416 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 45,876,700 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப்பணம் மாதாந்தம் அறவிடப்படுகின்றது. | -மேற்படி- |

## 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட ரூபா 764,114 மிகையான 02 மிகைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வழக்கு தொடுத்து மிகைக் கட்டணத்தை ஒரே தடவையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மிகைக்கட்டணம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 03 அறுவை கூடங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படாமல் 14, | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 14 நாட்களில் புதுப்பிக்கும் வகையில் தற்காலிக வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு முதல் அமுல்படுகின்ற திவிதொட்டவெலவில் அமைந்துள்ள சுடலைக் கூடத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | வெலிமட நகரத்தில் பொது பேரூந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பிரதேச சபைக்கு சொந்தமான மீன் விற்பனைக் கடைகளிலிருந்து வியாபார நிலையங்களில் இருந்தும் அகற்றப்படுகின்ற கழிவு பொருட்கள் உமா ஓயாவில் விடுவிக்கப்பட்டிருந்தது. | கழிவு நீர் அகற்றுவதற்கு பதிலீடாக தாங்கி ஒன்று மற்றும் உறிஞ்சும் பொருட்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றாடலுக்கு கழிவு பொருட்களை அகற்றுதல் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 79 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வெற்றியடைந்த நீர் மேவுகைகளுக்காக நிலக்கீழ் நீர் வழியூடாக நீர் அகற்றப்படல் வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மழைக்காலத்தின் போது பிரதான வீதியில் சேருகின்ற மழைநீர் பிரதான பேரூந்து நிலையத்தின் சந்தைக் கட்டிடம் ஊடாக வழிந்தோடுகின்றமையினால் அந்த நிலைமையைகளைத் தடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வடிகாண்களை முறைமைப்படுத்துவதற்கு மாகாண வீதி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கழிவு நீர் அகற்றும் வடிகாண் முறைமை பயன்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவு மற்றும் 2021 ஒக்டோபர் 21 ஆம் திகதிய இலக்கம் 2251 என்ற இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹொட்டெல், சிற்றுண்டிச்சாலை, தங்குமிடங்களில் இருந்து கடந்த ஆண்டின் வருமானத்தில் 01 சதவீதம் வரி அறவிட வேண்டியிருந்தபோதும் சபையினால் இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வருமானம் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு உரிய 01 சதவீத வரி கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின்போது 26 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக 02 சந்தர்ப்பங்களின் போது பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 142,670 செலவில் பிரசுரிக்கப்பட்ட முதலாவது பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் 09 கடைகளுக்கு கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கடைகளில் ஆகக் குறைந்த கேள்விப்பெறுமதி ஆகக் கூடிய பெறுமதியாக இருந்ததன் காரணமாக 17 கடைகளுக்காக கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. ஆகக்குறைந்த பெறுமதி திருத்தப்படாமல் ரூபா 130,888 செலவில் மீண்டும் ஒரு தடவை பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு கேள்வியேனும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் 26 கடைகளின் வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் அல்லாத 17 ஆதனங்கள் தொடர்பாக மீண்டும் பெறுகைகளை மேற்கொள்வதற்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் தொடர்பாக ரூபா 130,888 செலவினம் பயனற்ற செலவினமாக இருக்கவிலலை. | கேள்வி சமர்ப்பிக்க முடியுமான வகையில் ஆகக்குறைந்த கேள்வித்தொகை தீர்மானிக்க வேண்டியிருந்ததுடன். பெறுபேருகளுடன் பத்திரிகை அறிவித்தலுக்காக பொது மக்கள் பணம் பயன்படுத்தப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிலோகிராம் 37.5 வெற்று சிலிண்டர்கள் 08 மற்றும் 03 புல் வெட்டும் இயந்திரம் என்பவற்றின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | சபைக்குரிய 09 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களை பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக சொத்துக்களை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற 152 மயான நிலங்கள் மற்றும் பொது விளையாட்டு அரங்குகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மயான நிலையங்கள் தற்காலிகமாக மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான சகல சொத்துக்களையும் இனங்கண்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டில் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 584,098 பெறுமதியான வாகனம் மற்றும் 23 வண்டிகள் பௌதிக பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | விடயங்களை கண்டறிந்து 2024 ஆம் ஆண்டின் போது பொருட்பதிவேட்டு புத்தகம் சரி செய்யப்படும். | நிலையான சொத்துக்களின் பௌதிக இருப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்கு கிடைக்கின்ற சகல நிதியும் சபை நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் வெலிமட நகரத்தில் நடைபாதை வியாபாரிகளுக்காக வியாபார கொட்டெகுகள் நிர்மாணிப்பதற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட ரூபா 13,725,000 தொகை சபையின் நான்கு அங்கத்தவர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமித்து "வெலிமட நகர அபிவிருத்தி நடைபாதை வியாபார கொட்டகை நிர்மாணம்" என்ற பெயரில் அரசாங்க வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | வெலிமட ஐக்கிய நடைபாதை வியாபாரிகளின் சங்கத்தின் விருப்பத்தின் பிரகாரம் பிரதேச சபையின் நிதியத்திற்கு தொடர்புபடாத வகையில் கௌரவ சபை உறுப்பினர்கள் மூன்று பேர் மற்றும் நடைபாதை வியாபார சங்கத்தின் உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பு கொண்டு அரச வங்கிக் கணக்கொன்று ஆரம்பித்து சகல கொடுக்கல் வாங்கல்களும் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பாக பிரதேச சபைகள் சட்டம் மற்றும் உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) பிரதேச சபைக்குரிய கெப்பட்டிப்பொல நகரத்தில் அமைந்துள்ள வாகனத்தரிப்பிடத்தில் வாகனங்கள் நிறுத்தி வைத்தல் கட்டணத்தை சேகரிப்பதற்காக பிரதேச சபையின் நிரந்தர சுகாதார தொழிலாளர் பதவியில் சேவையாற்றுகின்ற ஊழியர் ஒருவரை ஈடுபடுத்துவதற்கும் அதற்காக சம்பளத்திற்கு மேலதிகமாக அறவிடப்படுகின்ற வாகன கட்டணங்களில் 50 சதவீத தரகுத் தொகையும் செலுத்துவதற்கும் 2022 யூன் 27 ஆம் திகதி முகாமைத்துவ குழு தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் 2023 சனவரி நவம்பர் வரை தரகு ரூபா 39,550 ஊழியருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் வாகன தரிப்பிட கட்டணம் அறவிடுவதற்கு உப விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை நடைமுறைகளின் மூலம் கேள்விதாரர் ஒருவர் முன்வராமையின் காரணமாக மக்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைக் குறைப்பதற்கு ஊழியர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | இது தொடர்பாக உப விதி ஒன்றை அங்கீகரித்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |